<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>
<u>அசல் வழக்கு எண். 174 /2020</u>

இந்நீதிமன்ற எழுத்தர் திரு J. மோகன் Grade –III Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் 2 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10 வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2022 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். ஏழுமலை (DW1 )<br>வயது. | நாள் 22/09/2022 |
| த/பெ. பெருமாள் | தொழில் |
| கிராமம் | வட்டம், |

<u>பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

1. வாதி எனது உடன்பிறந்த மூத்த சகோதரர் என்றால் சரிதான். நானும், எனது மூத்த சகோதரரான வாதியும் கூட்டுக்குடும்பமாக இருந்து எங்கள் குடும்ப சொத்துக்களை 30.05.2011 அன்று பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான்.

2. அந்த பாகப்பிரிவின் படி எ–அட்டவனை சொத்துக்கள் என்னவென்ற விவரம் எனக்கு தெரியாது. வாதிக்கும், எனக்கும் பாகப்பிரிவினையின் படி என்னென்ன சொத்துக்கள் பிரிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் அந்த பாகப்பிரிவினையில் பி–அட்டவனை சொத்து தனக்கு பிரித்துக்கொடுக்கப்பட்டது என்று கூறுகிறார்.

3. அந்த பாகப்பிரிவினையில் எ–அட்டவனை சொத்து எனது அண்ணனுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 238/8 எ கிணறு, மோட்டார் பம்பு செட் ஆகியவைகளில் எனக்கு பாதி பாகமும், எனது அண்ணன் வாதிக்கு பாதி பாகமும் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. பாகப்பிரிவினை செய்வதற்கு முன்பு ரோடில் இருந்து எங்கள் கழனி வழியாக கடைசி வரை செல்லலாம் என்றால் சரிதான். அப்போது ரோட்டில் இருந்து கடைசி வரை எந்த வாகனம் செல்ல வேண்டும் என்றாலும் எங்களது கழனி வழியாகத்தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான்.

5. 2011 பாகப்பிரிவினை செய்யும் வரை எனக்கும் எனது அண்ணனுக்கும் எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

வடக்கு தெற்கு சாலையில் இருந்து எங்கள் கழனிகள் அனைத்தும மேற்கு திசையில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு சர்வே எண். 231/7 எ மற்றும் 8 சி ரோடு ஓரமாக கொடுக்கப்பட்டது என்றாலும், எனது அண்ணனுக்கு ரோடு ஓரம் 8 பி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. வாதிக்கு சர்வே எண். 231/8 பி மற்றும் 11 ஆகிய நிலங்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 231/7 எ–வுக்கும் 8 சி–க்கும் தாண்டி தான் வாதியின் சொத்தான 8 பி மற்றும் 11 க்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ. 2 ல் 9 ம் பக்கத்தில் வாசகங்களான "நம்மில் ஒருவர் பாக நிலத்தின் வழியாக மற்றவர் பாகநிலங்கட்கு எரு, தழை, வண்டிமாடு போக, வரவும், தண்ணீர் கொண்டு செல்லவும், நம்மில் ஒருவருக்கொருவர் தடையின்றி வழி வாய்க்கால் விட்டுக்கொள்ள வேண்டியது என்றும் இந்த பாகப்பிரிவினை ஆவணத்தை நாம் அனைவரும் படித்து பார்த்தும் படிக்க கேட்டும் ஒருமனதாக ஒப்புக்கொண்டும் இதில் கையொப்பம் செய்துள்ளோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் பயிரிடாமல் கரம்பாக இருக்கும் போது தான் அவ்வாறு செல்லலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

8. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 2 ஆவணத்தில் கரம்பாக இருக்கும் போது தான் வண்டியை எடுத்து செல்ல முடியும் என்று ஏழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்க்கு முன்பாகவே இந்த வழக்கு சொத்தில் வழிவிட மறுப்பதாக வாதி என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல.

9. நானும் அவ்வாறு எந்த புகாரும அவர் மீது கொடுக்கவில்லை. எங்கள் இருவருக்கும் இந்த தாவா சொத்து சம்பந்தமாக அடிக்கடி பிரச்சனை வருவதால் எங்கள் இருவர் மீதும் செய்யூர் காவல் நிலையத்தில் எங்கள் இருவரையும் எதிரிகளாக சேர்த்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. வாதி இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது எங்கள் அனைத்து நிலங்களும் கரம்பாகத்தான் இருந்தது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் தன்னுடைய நிலத்தில் தர்பூசணியும், மல்லி செடியும் அப்போது வைத்திருந்ததாக மாற்றி சொல்கிறார்.

11. நான் பூச்செடிகளை மழை, மற்றும் வெயில் காலத்திலும் பயிர் செய்து கடைகளுக்கு மொத்த விலைக்கு பூவை கொடுத்துவிட்டு வருவேன். நான் பொதுவாக 10 முதல் 20 சென்டிற்கு பூச்செடி வைப்பேன்.

12. வழக்கறிஞர் ஆணையர் நிலத்தை அளக்க வரும் போது

தர்பூசணி மற்றும் பூச்செடிகள் அங்கு வளர்க்கப்பட்டிருந்ததா என்றால் தர்பூசணி போட்டு அறுக்கப்பட்டிருந்தது. பூச்செடிகள் இருந்தது. அந்த பூச்செடிகளை தற்போது வாதி வழி கோரும் சி–அட்டவனை சொத்தில் வைத்திருந்தேன் என்றால் சரிதான். அது எனது சொத்து அதனால் வைத்திருந்தேன்.

13.வாதியின் சொத்தாக சர்வே எண். 231/7 பி–ல் தெற்கு பகுதியில் ரோடு உள்ளதா என்றால் இல்லை. வழக்கறிஙர் ஆணையர் நிலத்தை அளக்க வந்தபோது வாதி டிராக்டரை ஓட்டி வழியாக மாற்றி வைத்திருந்தார். நான வழக்கறிஞர் ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

14. வாதி இந்த வழக்கில், வழக்கை தாக்கல் செய்தபோது சி–அட்டவனை சொத்தை வழியாக பயன்படுத்த எந்த ஆட்சேபனையும் தெரிவிக்க கூடாது என்று தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

15. அந்த அடை உத்தரவு பெற்ற பிறகு அந்த இடத்தில் டிராக்டரில் சாணியை ஏற்றி செல்லும் போது நானும் எனது மனைவியும் வாதியை கத்தியால் வெட்டியதாக செய்யூர் காவல் நிலையத்தில் எங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் சரிதான். ஆனால் அது பொய் வழக்கு.

16. வாதியின் கழனி கரம்பாக இருக்கும் போது அவர் வண்டி மாட்டுடன் எருவை ஏற்றி சென்ற போது இந்த பிரச்சனை ஏற்பட்டது என்றால் நான் அவர்களை கத்தியால் வெட்டவில்லை. அவர் கழனி கரம்பாகத்தான் இருந்தது. வாதியின் கழனி கரம்பாக இருக்கும் நிலையில் அவர் கழனிக்கு ரோட்டில் இருந்து எனது கழனி வழியாகத்தான் செல்ல வேண்டும் என்றால் அவர்களுக்கு செல்வதற்கு வேறு வழி உள்ளது.

17. வேறு வழி என்றால் ரோடில் இருந்து எவ்வாறு செல்ல வேண்டும் என்றால் ஒருத்தர் கழனிமேல் ஒருத்தர் சென்று பயிர் செய்கின்றோம். வாதி சொத்துக்கு சாலையாக எந்த பாதையும் கிடையாத என்றால் சரிதான். எனது கழனி வழியாக சென்றால் வாதி நேராக செல்லலாம் என்றால் சரிதான்.

18. வாதிக்கு அவரது கழனிக்கு செல்ல வேறு வழி இருக்கிறது என்பதை நான் எனது பதிலுரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பெயரிலும், எனது மனைவி பெயரிலும் 13/01/2018 ல் வாதியுடன் சண்டை போட்டு அவரை கத்தியால் வெட்டியதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி எனது பயிரை வண்டி விட்டு அடித்தால் பிரச்சனை

ஆரம்பித்தது ஆனால் அது பொய் வழக்கு.

19. என்னிடம் காட்டப்படும் குற்ற எண். 6/2018 செய்யூர் காவல் நிலையம் முதல் தகவல் அறிக்கை என் மீதும், எனது மனைவி மீதும் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். (**அந்த முதல் தகவல் அறிக்கை வா.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது) .**

20. வாதி எனது கழனி வழியாக அவர் கழனிக்கு வண்டியை எடுத்து சென்றால் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால், எனது கழனி கரம்பாக இருக்கும் போது அவர் ஏற்றி செல்ல எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. மேலும் கரம்பாக இருக்கும் போது வாதி சொல்லியுள்ள சி– அட்டவனை சொத்து வழியாகவோ, ரோட்டில் இருந்து என்னுடைய கழனி வழியாக செல்ல எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அந்த வாதி குறிப்பிட்டுள்ள சி–அட்டவனை சொத்தை ரோடாக மாற்றி கேட்க்கக்கூடாது.

21. வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எரு ஏற்றி சென்ற போது நான் பிரச்சனை செய்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் பயிர் வைத்துள்ள இடங்களை அடித்து மிதித்து நாசம் செய்ததால் அவ்வாறு செய்ய வேண்டியதாயிற்று.

22. பயிர் வைத்துள்ள போது வாதி தனது கழனிக்கு எவ்வாறு சென்றடைவது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் வாதி குறிப்பிட்டுள்ள சி–அட்டவனை சொத்தை தவிற வேறு வழி கிடையாது என்றாலும் நானும் எனது சகோதரரும் பாகப்பிரிவினை செய்திருப்பதும் அந்த பாகப்பிரிவினையில் சொல்லியுள்ள வாசகங்களின் படி வாதி சி– அட்டவனை சொத்து வாதியால் சாலையாக பயன்படுத்தி வந்தது என்றால் சரியல்ல.

23. எனக்கும் எனது அண்ணன் வாதிக்கும் ஏற்கனவே வேறு பிரச்சனை இருந்தததது என்றால் சரியல்ல. எனக்கும் எனது அண்ணனுக்கும் வேறு பிரச்சனை இல்லாத நிலையில் இந்த பிரச்சனையை மையமாக வைத்து தான் எனது மனைவியை விட்டு வேறுறொரு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். இந்த பிரச்சனையை வைத்து தான் எல்லாம் ஆரம்பித்தது.

24. இந்த வழக்கிற்கு பிறகு நிலத்திற்கு சென்று மோட்டார் செட்டை நான் எடுதது சென்றதாக வாதி என் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் அதை அவரே எடுத்து சென்று விட்டு என் மீது பொய் யாக புகார் ஒன்றை கொடுத்து விட்டார். நான் கழனியில் மோட்டாரை அவிழ்த்து சென்று விட்டதாக வாதி மீது புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

25. வாதி அவருடைய நிலத்தில் பயிர் வைத்து லாபம் அடையக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் அவர் வண்டி எடுத்து சென்றால் தடுக்கின்றேன் என்றாலும், மோட்டார் பம்பை அவிழ்த்து சென்று விட்டேன் என்றாலும் தடை உத்தரவை மீறி நடக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

26. வாதி பயிர் வைப்பதற்காக காவல் துறை மூலமாகவும், ஊர் பெரியவர்களின் மூலமாகவும் முயன்று முடியததால் வேறு வழியின்றி தற்போது நீதிமன்றத்தை நாடி உள்ளார் என்றால் சரியல்ல. எனவே நான் எதிர்வாதம் கூறுவது செல்லத்தக்கது அல்ல என்றாலும் இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

**(சாட்சிக்கு படிக்க தெரியாததால் படித்து காண்பிக்கப்பட்டு பின்னர் கையொப்பம் பெறப்படுகிறது)**
**(குறுக்கு விசாரணை இத்துடன் முடித்துக்கொள்ளப்படுகிறது)**
**(மறு விசாரணை இல்லை)**

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/Tmt.N. Preethi,
DM Cum JM
Cheyyur